தாராபுரம் இடைத்தேர்தல்:

நீலிக் கண்ணீர் வடிக்கிறார் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா!

ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி விமர்சனம்!

தாராபுரம், அக். 2 -

தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யின் வெற்றி வேட்பாளர் திருமதி சுகன்யாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு மனித நேய ஜனநாயக கட்சியின் தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. தொகுதியின் பல்வேறு இடங்களில் பரப்புரை மேற்கொண்டார்.

முன்னதாக தாராபுரத்தில் அனைத்து ஜமாத்தினர் மற்றும் சான்றோர்கள் பங்கேற்ற மனிதநேய ஜன நாயக கட்சி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பங்கேற்றார்.

இதில் திருப்பூர் மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மு.பெ.சாமிநாதன், நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர், பாளை அப்துல் வாஹப் எம்.எல்.ஏ. பங்கேற்றார்கள்.

கரையூர் நாலு ரோட்டில் பரப்புரையை தொடங்கியவர், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் மற்றும் வாசுதேவ நல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் ராஜா, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். கலை கதிரவன் ஆகியோர் ஏற்பாடு செய்த பரப்புரை கூட்டத்திலும் பேசினார்.

அதன் பிறகு மாலையில் அலங்கியம் என்ற இடத்தில் முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. மற்றும்



தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசினார்.

தளவாய் பட்டினம் என்ற இடத்தில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜெயராமன், ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார் ஏற்பாடு செய்த கூட்டத்தி லும் பேசினார்.

நிறைவாக தாராபுரம் ஜின்னா தியேட்டரில் நகர் மன்ற தலைவர் பப்பு கண்ணன் தலைமையில் நடைபெற்ற பரப்புரையில் பேசினார். மொத்தம் 5 இந்த இடங்களில் எழுச்சியாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களிலும் உரையாற்றினார்.

முன்னதாக வழியெங்கும் தி.மு.க.வினர் உற்சாகமாக ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார்.

தனது உரையில் அவர் கூறியதாவது...

த.வெ.க. வேட்பாளர் சத்திய பாமா அ.தி.மு.க.வில் வெற்றி பெற்று, தனது சுய நலத்திற்காக தற்போது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு, மீண்டும் இதே தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடுகிறார்.

இது சந்தர்ப்பவாத அரசியலுக்காக ஏற்படுத்தப்பட்ட வீண் செலவு மட்டுமல்ல. வீண் தேர்தலும் கூட. செல்கின்ற இடமெல்லாம் அவரை பொது மக்கள் விரட்டியடித்த காரணத்தினால், இன்றைய தினம் முதல்வரின் மேடையில் நீலிக் கண்ணீர் வடித்து நாடகம் ஆடுகிறார். இதன் மூலம் அனுதாப அலையை தேட முயற்சிக்கிறார்.

இந்த இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சியின் கடந்த நான்கு மாத கால தவறுகளுக்கும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவுகளுக்கும், அறிவிக்கப்படாத மின் கட்டணம் ஏற்றத்திற்கும், விலைவாசி உயர்வுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும், பாடம் கற்பிக்கும் வகையில் மக்கள் தி.மு.க. தலைமையிலான வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது மூலம் குதிரை பெற அரசியலை தமிழ் நாடு ஆதரிக்கவில்லை என் பதை தெரியப்படுத்த வேண்டும்.

இன்றைய தினத்தந்தியில் ஒரே நாளில் எட்டு பேர் படு கொலை என்ற வந்திருக்கும் தலைப்புச் செய்தியே இந்த ஆட்சி அவலத்தை காட்டு கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இன்றைய பரப்புரையில் அவருடன் கட்சியின் பொருளாளர் கேப்டன் சையது முகம் மது பாரூக், மாநில முதன்மைச் செயலாளர் கோவை ஜாபர், மாநில துணைச் செயலாளர்கள் கோவை அப்பாஸ், பொதக்குடி ஜெயினுதின், திருப்பூர் கண்ணன் ஆகியோரும் உடன் சென்றனர்.

மேலும் திருப்பூர் மாவட்டச் செயலாளர் ராயல் ராஜா, ம.ஜ.க. சமூக நீதி பாசறை மாநிலச் செயலாளர் நெல்லை ரமேஷ், தொண்டரணி மாநிலச் செயலாளர் கோவை ஆர்.எம்.ரபி, ம.ஜ.க. விளையாட்டு கழக மாநிலச் செயலாளர் மேட்டுப்பாளையம் நிவாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஈரோடு ஷபி உள்ளிட்டோரும் பங்கேற்றனர் .

மேலும் திண்டுக்கல் கிழக்கு, திருப்பூர், கோவை வடக்கு, ஈரோடு மேற்கு ஆகிய மாவட்டங்களின் செயலாளர்களும், நிர்வாகிகளும் ஆங்காங்கே பங்கேற்றனர்.

நிகழ்ச்சியை தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் ஆங்காங்கே தி.மு.க. தலைமை யிலான கூட்டணி கட்சியினருடன் இணைந்து எழுச்சியாக முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் வழக்கறிஞர் ஐ. பரந்தாமனை ஆதரித்து கள்ளபிரான்புரம் ஊராட்சி பாகம் 71 மற்றும் 72ற்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ச. சங்கர் கணேஷ் எம்.சி. தலைமையில் ஒன்றிய அமைப்பாளர் ஆர். லோகேஷ் குமார் முன்னிலையில் தலைமைக் கழக இளம் பேச்சாளர் சந்தோஷ் ஜெய், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் செ. ரவி,பகுதி துணை அமைப்பாளர்கள் ஏ.செந்தில்குமார், ஆர்.விஜய்,வட்ட இளைஞரணி அமைப்பாளர் அணிஷ்,துணை அமைப்பாளர் பா. புருஷோத்தமன் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

மாவட்ட செயலாளர்கள் தா.மோ. அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - பெரிய வெண்மணி, வீராலூர், நல்லூர் ஊராட்சிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

பி.கே.சேகர்பாபு தலைமையில் மேயர் பிரியா ராஜன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம், அக்.2-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 13 பாகங்களில், பெரிய வெண்மணி, வீராலூர், நல்லூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 281, 282, 283 ஆகிய பாகங்களில், 01.10.2026 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் தீவிர வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் இந்த வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

இதில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக வேட்பாளர் இ.பரந்தாமன் ஆகியோர் அந்தந்த பாகங்களில் திரண்டிருந்த பொதுமக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



இந்த வாக்குச் சேகரிப்பில் ப.தாயகம் கவி, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, சி.மகேஷ்குமார், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, எல்.பி.எப்.மோகன், கு.கிருஷ்ணமூர்த்தி, பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், நா.நெப்போலியன், இரா.டீக்கா, பி.செந்தில்குமார், ஆர்.பி.ரமேஷ், ஆர்.விஜய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய வெண்மணி, வீராலூர், நல்லூர் ஆகிய ஊராட்சிகளின் 3 பாகங்களுக்கான பொறுப்பாளர்கள் ராஜேஷ், அம்பேத்கார், பி.எம்.சேகர், பி.ஜெயராமன், முத்து, ஜெயபால், சுரேஷ், ருக்கு, கண்ணன், ராஜாமணி, லோகு, கலைமணி, ரமேஷ், வேலாயுதம், நடராஜ், ராஜு மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம்!

சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. வாக்கு சேகரித்தார்!

மதுராந்தகம், அக்.2-

நடைபெறவிருக்கும் மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடை தேர்தல் பணிகளை யொட்டி, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மேனாள் அமைச்சருமான மா. சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் படி, சைதை கிழக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட பழமத்தூர் ஊராட்சி, பாகம் 29-ல் வசிக்கும் பொதுமக்களிடையே 30.09.2026 அன்று மாலை நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில், 13-வது மண்டல குழு தலைவர், சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி. நடைபெற்று வரும் கையாலாகாத ஆட்சியின் அவலங்களையும், திராவிட முன்னேற்ற கழகம் செய்த சாதனைகளையும் விளக்கி பேசி மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து வாக்குகள் சேகரித்தார். இக்கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதிக்கு உட்பட்ட வட்ட செயலாளர்கள், பழமத்தூர் ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி சேகர் தலைமையில் இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ சுரேஷ் முன்னிலையில் ஒன்றியச் செயலாளர் குமார், ஒன்றிய கவுன்சிலர் சிவராமன், வட்டக் கழகச் செயலாளர்கள் கணேசன், கண்ணன், இரா.பாலன் உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் தொகுதியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனைபடி புக்கதுறை ஊராட்சி சமத்துவபுரத்தில் 14ஆம் பாகத்தில் இரா.பாலன் ஆர்.வி.லஷ்மிவேலு தலைமையில் மகளிர் அணி நிர்வாகிகள் மலையம்மா, கோமதிபொற்செழியன், மேகலா, திருமலை, தகவல் தொழில்நுட்ப தொகுதி ஒருங்கிணைப்பாளர் சேர்ந்த மகளிர் அணியினர் வீடு வீடாக சென்று வாக்குகள் சேகரித்தனர்.

